Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 338 | வியாழக்கிழமை | ஐப்பசி 18 ஆம் நாள் 04 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+VIII | விலை: 30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

உதயன் வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
உதயனின்
தீபாவளித் திருநாள்
நல் வாழ்த்துக்கள்.





**முச்சந்தி முரளி**

"புத்தர் சிலை, விகாரை, தென்னம்பிள்ளை எண்டு இனி காணி பிடிக்க என்னத்தை புதிசா கண்டுபிடிக்கப் போயினமோ எண்டு தெரியேலையே..."



# தன்மானம் இருந்தால் வெளியேறுக!

## அரசுக்கு எதிரான போராட்டத்தில் அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு சஜித் அறிவுரை

கொழும்பு, நவம்பர் 4

அரசாங்கத்தின் பாதை தவறானது என்பதைத் தெரிந்துகொண்டீர்களானால், வரப்பிரசாதங்கள் சலுகைகளுக்காக அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்காமல் அரசிலிருந்து வெளியேறுங்கள் என்று, அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவுரை வழங்கி சவால் விடுத்துள்ளார். 14 ►

## கொரோனாவால் மூதாட்டி சாவு!

*பூப்புனித நீராட்டுவிழாவில் கலந்துகொண்டோர் தனிமை*

சாவகச்சேரி, நவ. 4

கொரோனாத்தொற்றால், தென்மராட் 14 ►

## கஞ்சாவுடன் மாணவன் கைது

மன்னார், நவ. 4

மன்னாரில், 4கிலோ 700 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதோடு, 14 ►

## வடக்கில் பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு நாளை வெள்ளிக்கிழமை சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் 14 ►

## செயலணி ஆராய்ந்தால் நாடாளுமன்றம் எதற்கு?

*கேள்வியெழுப்புகிறது ஆயர்கள் பேரவை*

கொழும்பு, நவ. 4

"சட்டரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றில் கலந்துரையாடப்படாமல், நியமிக்கப்பட்ட 14 ►

## நலன்புரி நிலையங்களில் வசிப்போருக்கு காணி உறுதிகள்

*வழங்கினார் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த ஹேரத்*

யாழ்ப்பாணம், நவ. 4

உள்ளூரில் இடம்பெயர்ந்து, நலன்புரி நிலையங்களில் வசிக்கும் காணியற்ற குடும்பங்களுக்கு வழங்கவென, அரச நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இந்தநிகழ்வு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. 14 ►

## தென்னை வைத்து காணி அபகரிப்பு; இராணுவத்தளபதி ஆரம்பித்து வைப்பு!



யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கில், இராணுவத்தினர் காணிகளை சுவீகரிக்கின்றனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டிவரும் நிலையில், அதனை உறுதிப்படுத்தும் விதமாக, யாழ்ப்பாணத்தில், இராணுவத் தளபதி நேற்று 12 ஏக்கரில் தென்னங்கன்றுகளை நடுகை செய்யும் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

அரசாங்கத்தின் 4 மில்லியன் தென்னங்கன்றுகள் பயிரிடும் தேசிய வேலைத் திட்டத்தையொட்டி யாழ். 14 ►




## ஆசிரியர்களுக்கு ஆதரவாக பெற்றோரும் போராட்டம்

வவுனியா, நவ. 4

அதிபர், ஆசிரியர்களின் சம்பள உயர்வு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பெற்றோரும் போராட்டத்தில் குதிக்கத்தொடங்கியுள்ளனர். அதன்படி, வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பெற்றோர்கள் சில பாடசாலைகளின் முன்பாக 14 ►

## ஆளுநர் உறுதிமொழி: கைவிடப்பட்டது போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக, சுகாதாரத் தொண்டர்கள் சுமார் 8 மாதங்களாக மேற்கொண்டுவந்த போராட்டம், ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டு, போராட்ட கொட்டகைகளும் அகற்றப்பட்டன. 14 ►



## டொலருக்கு அலையும் அரசிடம் நீதியை எதிர்பார்க்கமுடியாது

*எரான் விக்கிரமரட்ன எம்.பி. யாழில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 4

தென்னிலங்கை போன்று வடக்கு மாகாண சபையிலும் இடமாற்றங்களை வழங்காதிருக்க பாலியல் லஞ்சம் கோரப்படுவதான தகவல்கள் கிடைத்துள்ளன. டொலர்களுக்காக அலையும் இன்றைய ஆட்சியாளர்களிடமிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி 14 ►

## புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 4


சுன்னாகம் பொதுநூலகத்தில் நாளை முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

2021ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாத தலைப்பான 'தொலைதூர வாசிப்பு'க்கு அமைய பல்வேறு தரப்பினர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ள நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் இந்தப் புத்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சுன்னாகம் பொதுநூலகமும் எங்கட புத்தகங்கள் அமைப்பும் இணைந்து இந்தக் கண்காட்சியை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

### வவுனியா வடக்குப் பாடசாலையில்
## ஆரம்பப் பிரிவு மாணவர் இருவருக்குக் கொரோனா

வவுனியா, நவ. 4



வவுனியா வடக்கு வலயப் பாடசாலை ஒன்றில் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சகோதரர்கள் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அந்த மாணவர்கள் தரம் 1 மற்றும் தரம் 5இல் கல்வி கற்கின்றனர். அவர்களின் உடல்நிலையில் மாற்றம் தெரிந்ததை அடுத்து, பெற்றோர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சோதித்ததை அடுத்து மாணவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் இருவரும் தனிமைப்படுத்தப்பட்டதுடன் அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம-18)

## கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் முகமாலை மக்களிடம் கையளிப்பு!

கிளிநொச்சி, நவ. 4

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் உள்ள முகமாலையில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டடவாக்க இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கண்ணிவெடி அகற்றப்பட்ட 316 ஏக்கர் காணியை பொது மக்களிடம் கையளித்துள்ளனர்.

போர்க் காலத்தில் இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையில் கடும் போர் இடம்பெற்ற பகுதியாகவும் முன்னரங்கப் பிரதேசமாகவும் முகமாலை பிரதேசம் காணப்பட்டது. இதன் காரணமாக அதிகளவு கண்ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிக்காத வெடி பொருள்கள் நிறைந்த பிரதேசமாகக் காணப்பட்ட முகமாலையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் தொடர்ச்சியாக கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-214)



உங்கள் மனதிற்கு ஒளியூட்டி
உங்கள் உலகை ஒளியேற்றுங்கள்.

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கியின் தீபாவளி வாழ்த்துகள்

1975 BOC
www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## வலி.தென்மேற்கு பிரதேசசபையின் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றம்



மானிப்பாய், நவ. 4

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 12 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், தவிசாளரால் வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் மீதான விவாதங்கள் காரசாரமாக இடம்பெற்றன. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் தமது கோரிக்கைகள் பாதீட்டில் உள்ளடக்கப்படவில்லை என்று கூறி அதனை எதிர்த்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் பாதீட்டை ஆதரித்தனர்.

இதனையடுத்து பாதீடு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 12 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப் பட்டது.

28 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 2 உறுப்பினர்கள் கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை. 19 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். எதிராக ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் 7 உறுப்பினர்கள் வாக்களித்தனர். (ஒ-4-319)




# காற்றில்பறந்த சுகாதார நடைமுறை களைகட்டியது தீபாவளி வியாபாரம்!

**யாழ்ப்பாணம், நவ. 4**

**தீபாவளியை முன்னிட்டு வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களினதும் நகரப் பகுதிகளில் நேற்று வியாபாரம் களைகட்டியது. எனினும், சுகாதார நடைமுறைகள் எவையும் பின்பற்றப்பட வில்லை.**

மழை இடையிடையே பெய்தாலும், மக்கள் தீபாவளிப் பண்டிக்கைக்கான ஆடைக் கொள்வனவுகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். கொரோனா முடக்க காலத்தின் பின்னர் வர்த்தக செயற்பாடுகளும் நேற்றுக் களைகட்டியிருந்தன.

வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் கடும் வாகன நெரிசலும் ஏற்ப்பட்டுள்ளது.

இதேவேளை, பொருள்களை கொள்வனவு செய்யும் பொது மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணாமல், சமூக இடைவெளிகளையும் கடைப்பிடிக்காமல் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (ம-110)

---

தடைசெய்யப்பட்ட சேதனப் பசளைகளுடன்

## இலங்கைக் கடற்பரப்புக்குள் மீண்டும் நுழைந்தது கப்பல்!

கொழும்பு, நவ. 4

தடைசெய்யப்பட்ட சேதனப் பசளைகளை ஏற்றிய சீனக் கப்பல் நேற்று மீண்டும் இலங்கையின் கடற்பரப்புக்குள் நுழைந்துள்ளது.

மாத்தறை - வெலிகமையில் இருந்து 61 கடல்மைல் தொலைவில் குறித்த கப்பல் உள்ளது. அந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை நோக்கி நகர்ந்தவண்ணமுள்ளதாக சர்வதேச கப்பல்களின் பயணம் தொடர்பிலான தரவுக்கட்டமைப்பின் மதிப்பீட்டில் தெரியவந்துள்ளது.

பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பக்ரீறியா அடங்கியுள்ளதாக தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவையினால் இரண்டு தடவைகள் உறுதிப்படுத்தப்பட்ட 20 மெற்றிக் தொன் சேதனப் பசளையை ஏற்றி குறித்த கப்பல் பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சிமெந்துக்குத் தட்டுப்பாடு ஒரு மாதத்துக்குள் முடிவு


கொழும்பு,நவ.4

எதிர்வரும் 3 வாரங்களுக்குள் அல்லது ஒரு மாதத்துக்குள் சிமெந்துத் தட்டுப்பாடு முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று சிமெந்து நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சிமெந்து இறக்குமதியாளர்களுக்கும், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது சிமெந்து இறக்குமதிக்கான முற்பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அதிகளவான கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக ஒரு வாரத்துக்குமேல் கடைகளில் சிமெந்து விற்பனைக்கு வைக்கப்படவில்லை. அத்துடன் அரசின் வீட்டுத் திட்டப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சிமெந்துத் தட்டுப்பாட்டால் அதற்குரிய பணிகளும் முடங்கியுள்ளன. (ஒ-4)

---



## 500 கிலோ மீன்கள் கிளிநொச்சியில் சிக்கின


கிளிநொச்சி, நவ.4

**கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் கீழ் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவரின் வலையில் 500 கிலோவுக்கு மேற்பட்ட நன்னீர் மீன்கள் அகப்பட்டுள்ளன.**

ஏனைய மீனவர்களின் உதவியுடன் நன்னீர் மீனவ சங்கத்தின் இயந்திரப் படகுமூலம் குறித்த மீன்கள் கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றை தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பார்வையிட்டுள்ளனர்.

சகோதரர்கள் இருவர் சேர்ந்து மீன்பிடியில் ஈடுபட்டபோது அவர்களின் வலையில் குறித்த மீன்கள் அகப்பட்டுள்ளன எனவும் இவற்றின் பெறுமதி ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-113)

## தீபங்களின் பிரகாசத்தால் வாழ்க்கை ஒளி பெறட்டும்



இந்துக்களின் பண்டிகைகளில் ஒன்றாகக் கருதப்படும் தீபாவளி, தீபங்களின் வரிசை என்று பொருள்.

உலகில் உள்ள எல்லா இந்துக்களும் இந்தத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இது மிக மிகப் பழங்காலத்திலிருந்தே இந்துக்களின் வாழ்க்கையோடு கலந்து போன கொண்டாட்டமாகும்.

ஶ்ரீகிருஷ்ண பகவான் நரகன் என்ற அசுரனை வதம் செய்தபோது அவனுடைய கடைசி வேண்டுகோளுக்கேற்ப தீபாவளிப்பண்டிகை கொண்டாடப்படுகிறது .

இந்தத்திருநாளிலே எமது அக இருள் ஒழிந்து ஒளிமயமான வாழ்வு பிரகாசிக்க வேண்டும் என்று தீபங்களால் விளக்கேற்றுகிறோம்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனாப் பரவல் காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி மீண்டுவருகின்றனர்.

இந்த நாட்டிலே வாழ்கின்ற சகல இன மக்களும் ஒற்றுமையாகவும் ஐக்கியத்துடனும் ஒருவரைஒருவர் புரிந்துகொண்டு மங்கலகரமான தீபத் திருநாளில் தீபங்களின் பிரகாசத்தால் எல்லோருடைய வாழ்க்கையையும் ஒளி பெறட்டும்.

ஜீவன் தியாகராஜா
ஆளுநர் - வடக்கு மாகாணம்

---

**இண்டைக்குத் தீபாவளி. அதால நேற்று ரவுண் பக்கமாக போய்வர ஏலாத அளவுக்கு ஒரே நெரிசல். தள்ளுமுள்ளுப்பட்டுத்தான் எல்லாரும் போய்வந்தவை. கடையளில மட்டுமில்ல, றோட்டுகளில்கூட நெருக்குப்பட்டுத்தான் எல்லாரும் திரிஞ்சவை. கனபேர் மாஸ்க் போட வேணும் எண்டதையே மறந்திட்டினம். மழை பெய்ததால மாஸ்க் நனைஞ்சிடும் எண்டு போடேலையோ தெரியாது. ஆனால் கொரோனாவுக்கு மழையில நனையப் பயம் இல்லை. 'எப்ப அடுத்த கட்ட ஆட்டத்தை தொடங்கிறது?' எண்டு கொரோனா கண்ணுக்க எண்ணெய் விட்டுக் கொண்டு வெயிட் பண்ணேக்க, நாங்களும் அதுக்கு ஏத்தமாதிரி சமூக இடைவெளியில்லாமல், மாஸ்க் போடாமல், தீபாவளியோட வீடுகளுக்க கொரோனாவையும் கொண்டு போயே தீருறது எண்டு ஒற்றைக்காலில நிண்டிருக்கிறம்.**

**உடுப்புக்கடையளை விடவும் பார்களிலதான் திருவிழாமாதிரி கடுங்கூட்டமாம். பின்ன, இண்டைக்கு தீபாவளி களைகட்டி, வெறியேறி றோட்டு வழியளில விழுந்து கிடக்க, நேற்றே வாங்கி வைக்கத்தானே வேணும். சாராயம் இல்லாட்டி, இண்டைக்கு லீவு நாளில அப்பாவிக் குடிமக்கள் எங்கபோய் வாங்கமுடியும்? ஆனாலும் பார்களில் 'சரக்கு' வாங்கின எல்லாரும் எங்கட அரசாங்கத்தை வாழ்த்தியிருப்பினம். எல்லாச் சாமானுக்கும் விலையேத்தின அரசாங்கம் இதுவரைக்கும் உந்தச் சாராயத்துக்கு சல்லிக்காசும் கூட்டேலை. முந்தி வித்த அதே விலைக்கே இப்பவும் வாங்கக் கூடிய பொருள் எண்டால் அது சாராயம் மட்டும் தான். 'குடிமக்கள்' மீது உண்மையாவே அக்கறையும், கரிசனையும் எங்கட அரசாங்கத்துக்கு இருக்கெண்டு இப்பவாவது விளங்குதோ?**

**இல்லாட்டி மற்ற நாட்டு அரசாங்கங்கள் எண்டா இப்ப என்ன செய்திருக்குங்கள்? வருமானத்தைக் கூட்டுறதுக்காக அத்தியாவசியப் பொருளிகளின்ர விலையைக் கூட்டாமல் சாராயம், சிகரெட் எண்டு உதுகளின்ர விலையைத்தான் தாறுமாறு தக்காளி சோறு மாதிரி ஏத்தியிருப்பினம். ஆனால் எங்கட அரசாங்கம் தான் 'குடிமக்களின்' நன்மைக்காக 'கூட்டினால் அத்தியாவசியமான பொருள்களின்ர விலையைக் கூட்டுவமே தவிர சாராயவிலையில கைவைக்கவே மாட்டம்' எண்டு உறுதியா நிக்குது. இந்த உறுதிதான் எங்கட அரசாங்கத்தை 'எங்கேயோ' கொண்டுபோகப் போகுது பாருங்கோவன்.**

**ஆங்..மறந்து போனன் எல்லாருக்கும் பட்சியின்ர தீபாவளி வாழ்த்துக்கள்.**



- பட்சி

# இன்னொரு அலை ஏற்பட்டால் மக்களுக்கே பெரும் நெருக்கடி

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு,நவ.4**

**கொரோனாத் தொற்றின் இன்னொரு அலையை நாடு சந்திக்க நேரிட்டால், மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை அதிகம் சந்திக்க நேரிடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவிக்கையில்;

நாட்டில் கொரோனா நிலைமை மீண்டும் கட்டுப்பாட்டை மீறக்கூடும். பொதுப் போக்குவரத்தில் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமை, அலுவலகங்களில் நெகிழ்வான வேலை நேரமின்மை மற்றும் கணிசமான எண்ணிக்கையிலான இளைஞர்கள் தடுப்பூசியைப் பெறாமை உள்ளிட்ட காரணங்களால் கொரோனாத் தொற்று அதிகரிக்கும் அபாயம் ஏற்படலாம்.

தற்போது போதிய பஸ்கள் மற்றும் ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாத நிலையில் பொதுமக்களை குறைகூற முடியாது. தற்போதைய நெருக்கடியில் நெகிழ்வான வேலை நேரங்களை அறிமுகப்படுத்த நிறுவனங்களும் தயாராக இல்லை. கொரோனாவுக்கு எதிராக இளைஞர்கள் தடுப்பூசி போட மறுப்பது நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கும்.

நாட்டில் இன்னொரு அலை எழுந்தால், மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்- என்றார். (ஒ-4)

## பயிரிடப்பட்ட வயல்கள் வெள்ளத்தில் தத்தளிப்பு

பூநகரி,நவ.4

பூநகரி பிரதேசத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வயல்களில் பயிரிடப்பட்டநெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடையும் அபாயத்தில் உள்ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பூநகரி ,செல்லையாதீவு, செட்டிக்குறிச்சி ஆகிய இடங்களில் தேங்கும் கழிவு நீர் கடலுக்கு வழிந்தோடக்கூடிய வகையில் அங்கு வடிகால் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த வடிகால் நீண்டகாலமாக புனரமைக்கப்படவில்லை. அதன் காரணமாக மழைவெள்ளம் வடிந்தோட முடியாமல் அயலில் உள்ள வயல்களில் தேக்கமடைந்துள்ளது.

இந்த வருடம் பயிரிடப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் வயல்களில் வெள்ளம் தேக்கமடைந்துள்ளது.

உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு வயல்களில் காணப்படும் மேலதிக வெள்ளத்தை வழிந்தோடக்கூடிய வகையில், அங்குள்ள வடி காலைப் புனரமைக்க வேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-9)



## சமூக பொலிஸ் சேவைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

பொலிஸாரின் சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு, சமூக பொலிஸ் சேவைகளை ஆரம்பிக்க பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவை மையமாகக் கொண்டு நிறுவப்படும் இந்த சமூக பொலிஸ் சேவையானது, 153 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி, 9 பொலிஸ் பிரிவுகளில் செயற்படவுள்ளது.

இதனூடாக கிராமமக்கள் சிறு முறைப்பாடுகள், பொலிஸ் அறிக்கைகள் மற்றும் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்- என்றுள்ளது. (ஒ-4-125)

## கணவனின் சடலத்தை ஏற்க மனைவி மறுப்பு

கொழும்பு,நவ.4

மக்களால் அடித்துக் கொலை செய்யப்பட்ட கொள்ளையர் ஒருவரின் சடலத்தை ஏற்றுக் கொள்ள அவரது மனைவி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

முல்லேரியா, மாலிகாகொடெல்ல பிரதேசத்தில் வீடு ஒன்றில் கொள்ளையடிக்கச் சென்றபோது, கொள்ளையர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

கொலை செய்யப்பட்ட கொள்ளையரின் சடலத்தை ஒப்படைக்கச் சென்றபோது அதனை ஏற்கமுடியாது என்று அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் சடலத்தை அவரது சகோதரியிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர் முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்த சத்துர மதுரங்க என்று அழைக்கப்படும் மதுரங்க என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-4)

## போராட்டத்துக்கு தடை நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு,நவ.4

இலங்கை மின்சாரசபை உட்பட பல தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களால் கொலன்னாவ பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக முன்னெடுக்கவிருந்த போராட்டத்தை நிறுத்துமாறு, வெல்லம்பிட்டி பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கை, கொழும்பு மேலதிக நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## சட்டமா அதிபரின் கோரிக்கை நிராகரிப்பு

கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தை மீளப்பெறுவதற்கு, சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நிராகரித்துள்ளது.

பிரதிவாதிக்கு எதிரான குற்றப்பத்திரத்தைத் தொடர்ந்தும் விசாரணை செய்யவோ அல்லது அதனை முன்னெடுத்துச் செல்வதற்கோ முடியாது என்று சட்ட மா அதிபர் தீர்மானித்துள்ளார்.

அதனால் குற்றப்பத்திரத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லாதிருப்பதற்கான அனுமதியை வழங்குமாறு சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையாகிய சிரேஷ்ட சட்டத்தரணி லொஹான் அபேவிக்ரம கோரிக்கை விடுத்தார்.

விசேட மூவரடங்கிய மேல் நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குடன் தொடர்புடைய பிரதிவாதி ஒருவருக்கு எதிரான குற்றப்பத்திரத்தை நீக்கிக் கொள்வதாயின், சட்டமா அதிபர் நீதிமன்றில் முன்னிலையாகி, அவரின் கையொப்பத்துடன் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்க வேண்டும் என்று நீதிபதிகள் குழாம் அறிவித்தது.

இதனையடுத்து வழக்கை டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு, சம்பா ஜானகி ராஜரத்ன, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது. (ஒ-4)

## *11 பேர் கடத்தல் விவகாரம்:*

# அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிகின்றார் சட்டமா அதிபர்

கொழும்பு, நவ.4

11 பேர் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்ட விவகாரம் தொடர்பில், சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்னம் அரசியல் அழுத்தங்களுக்குக் கட்டுப்பட்டு, முதுகெலும்பின்றிச் செயற்பட்டு வருகின்றார். இவ்வாறு காணாமற்போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 2008 ஆம் ஆண்டு கப்பம் பெறும் நோக்கில் 5 மாணவர்கள் உள்ளடங்கலாக 11 பேர் கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்டனர். சம்பவம் இடம்பெற்று 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்த விவகாரம் தொடர்பில் இன்னமும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொட உள்ளடங்கலாக கடற்படை அதிகாரிகள் 14 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்வதற்கான தீர்மானம் முன்னாள் சட்டமா அதிபரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும் அதற்கு மாறாக வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை யைத் தாக்கல் செய்யாமல் இருப்பதற்குத் தற்போதைய சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

அதற்கெதிராக கடந்தமாதம் 29ஆம்திகதி, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக காணாமற் போனோர் குடும்ப ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவிக்கையில்,

இந்த விவகாரம் தொடர்பில் ட்ரயல் அட்பார் விசேட நீதிமன்றின் ஊடாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சட்டமா அதிபர் மீது எமக்கு நம்பிக்கையில்லை. சம்பவம் தொடர்பில் பலவருடங்களாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனூடாகத் திரட்டப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் முன்னாள் கடற்படைத்தளபதி உள்ளடங்கலாக 14 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன்னாள் சட்டமா அதிபரால் தீர்மானிக்கப்பட்டது. எனவே இந்தத் தீர்மானம் வெறுமனே தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளப்பட்டவொன்றல்ல.

ஆனால், கடந்த மேமாதம் புதிய சட்டமா அதிபராக சஞ்சய் ராஜரத்னம் பதவியேற்றுக் கொண்டதையடுத்து, இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தரப்பான எமக்குக்கூடத் தெரியப்படுத்தாமல், நீதிமன்றில் வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யாமல் இருப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரிய விசாரணைகள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், அவற்றிலிருந்து சட்டமா அதிபரால் இலகுவாக விடுதலை செய்யப்படுவார்களாயின் சட்டம், நீதிமன்றமும் எதற்கு என்ற கேள்வி எம்மத்தியில் எழுகின்றது - என்றார். (ஒ-4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஒளியின் பெருநாளில் இருளைத் தொலைத்தல்


இன்னலின் இருளை அகற்றி பாரெல்லாம் நம்பிக்கையின் ஒளியைப் பரவச் செய்யும் தீபாவளித்திருநாள் இன்று. ஆனால் கடந்த வருடத்தை விடவும் இந்தவருடத் தீபாவளி, இலங்கைவாழ் மக்களை இன்னமும் இன்னலுக்குள் ஆழ்த்துகின்ற ஒன்றாகவே மாறியிருக்கிறது. கடந்தவருடம் தனியே கொரோனா அச்சம் மட்டுமே எம்மைச் சூழ்ந்திருந்தது. ஆனால் இன்றோ, அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்வு, வாழ்வாதாரச் சிக்கல்கள், விவசாயப் பயிர்களுக்கான உரமின்மை, நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்றுத்தீர்த்தல், கல்வியைத் தனியார் மயமாக்கல் என்பன கொரோனா அச்சத்தையும் மேவியபடி 'கோரஸ்' பாடியபடி கொலைவெறியோடு நம் வாழ்வில் கும்மியடித்துக் கொண்டிருக்கின்றன.

எல்லோரிடமும் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறிகளே எஞ்சிக் கிடக்கின்றன. ராஜபக்ச அரசாங்கத்தை முதலில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினர் மட்டுமே விரும்பாத சூழல் இருந்தது. ஆனால், இப்போது சிறுபான்மையினரை விடவும், சிங்களப் பெரும்பான்மையினரே அதிகளவுக்கு இந்த அரசாங்கத்தின்மீது வெறுப்பை உமிழத்தொடங்கியுள்ளனர். அந்தளவுக்கு சகலரின் வாழ்வாதாரத்தையும் கண்மூடித்தனமாக அசைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது ராஜபக்ச அரசாங்கம். எந்தவித தொலைநோக்குமின்றி, சரியான திட்டமிடலின்றி, உரிய பொருளாதாரக் கொள்கைகள் இன்றி தம் எண்ணத்தில் தோன்றும் எல்லாமே நாட்டின் சுபீட்சத்துக்கானவை என்று சொல்லியபடி, மக்கள் எல்லோருக்கும் சமாதியைத்தான் இந்த அரசாங்கம் தோண்டிக் கொண்டிருக்கிறது.குறைந்தபட்சம் அத்தியாவசியப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையைக் கூடத் தீர்மானிக்க வக்கற்றதாக அரசாங்கம் மாறியிருக்கிறது. அரிசி, சீனி, சமையல் எரிவாயு, பால்மா,சிமெந்து, எரிபொருள் என எல்லாவற்றினதும் விலைகளை வியாபாரிகளே தீர்மானிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

'அப்படி எல்லாப் பொருள்களின் விலைகளையும் தங்கள் இலாபத்துக்காக மக்கள்நலனைத் துளியும் கணக்கில் கொள்ளாமல் வியாபாரிகள்தான் தீர்மானிக்கப்போகின்றார்கள் என்றால், இந்த நாட்டை ஆட்சி செய்ய அரசாங்கம் எதற்கு? பேசாமல் வியாபாரிகளே ஆளலாமே' என்ற மனோநிலைக்கு மக்கள் செல்லத் தொடங்கிவிட்டனர். கையில் தொழிலில்லை, பணமில்லை, உற்பத்திகளில்லை, ஏற்றுமதியில்லை, வீட்டில் பொருள்கள் இல்லை என்று 'இல்லைகளால்' மட்டுமே நிரம்பிக் கொண்டிருக்கிறது இலங்கையர்களின் வாழ்வு. எங்கும் இருள். ஒளியின் சிறுகீற்றுக்கூட தென்படும் அறிகுறியேதுமில்லை. இப்போது சமையல் எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிக்கப்போகும் சமிக்ஞைகள் பலமாக எழுகின்றன. சுமார் 3 மாதங்களுக்குள் மூன்றாவது முறையாக சமையல் எரிவாயுவின் விலை மடங்குக் கணக்கில் ஏறினால், எப்படி சாதாரண மக்களால் தாங்கிக் கொள்ளமுடியும்?

துறைமுகம், துறைமுக நகரம், மின்நிலையம் , தீவுகள் என எந்தெந்த வளங்களையெல்லாம் விற்றுத்தீர்க்கமுடியுமோ அவற்றையெல்லாம் சீனா, அமெரிக்கா, இந்தியா போன்ற வல்லரசுகளுக்கு விற்றுக் காசாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தநிலை நீடித்தால், இலங்கையின் தலைவிதியையும், மக்களின் வாழ்வியலையும் மேற்குறித்த நாடுகளே தீர்மானிக்கும் நிலை வெகுவிரைவில் தோன்றிவிடும்.


இப்படியெல்லாம் தங்களின் வாழ்வு முழுதும் இருள் அப்பிக் கிடக்கும் சூழலில் யார் வந்து ஒளியேற்றுவார்? என ஒட்டுமொத்த இலங்கை மக்களும் ஏங்கிக் கிடக்கின்றனர். புராண, இதிகாசங்களில் நரகாசுரனை வதம் செய்ய விஷ்ணு வந்ததைப் போன்று இந்தக் கலியுகத்தில் யுகபுருஷர்கள் எவரும் வந்து நம்மை மீட்கப்போவதில்லை. நம்மைச் சூழ்ந்திருக்கும் இருளை அகற்ற நாம் தான் தீக்குச்சியைப் பற்றவைக்க வேண்டும். அடுத்த ஒளியின் பெருநாள் வருவதற்கிடையிலாவது இருளைத் தொலைக்க சபதமெடுங்கள். மக்களின் எழுச்சி எனும் பெருநெருப்புக்கு முன்னால் எந்த இருளும் தாக்குப் பிடித்ததில்லை. அந்தவரலாறு இலங்கையில் மீண்டும் திரும்பக் கூடும்.




# நியமனங்களை ஏற்றுக்கொண்டு அடங்கிப்போபவன் நானல்லன்!

## ஆனந்ததேரர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 4**



**எவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட்டாலும் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை, அவர்களுக்கான எனது குரலை யாரும் அடக்க முடியாது என வண. முருத்தெட்டுவே ஆனந்ததேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக ஆனந்த தேரர் நியமிக்கப்பட்டார். அரசுக்கு எதிராகப் பல்வேறு கருத்துக்களை அவர் தெரிவித்து வந்த நிலையில், அவரின் எதிர்ப்புக்குரலை அடக்குவதற்காகத்தான் இந்த நியமனம் வழங்கப்பட்டது என்று விமர்சிக்கப்பட்ட நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எவ்வாறான வரப்பிரசாதங்களுக்கும் நான் ஏமாந்தவன் இல்லை. எதனாலும் என்னை ஏமாற்ற முடியாது. எனது குரல் எப்போதும் ஓங்கியிருக்கும். அது இன்றும் - நாளையும் - எப்போதும் மக்களுக்காக இருக்கும். தவறுகளை தட்டிக்கேட்பேன். சுட்டிக்காட்டுவேன" - என்றார். (ம)

# அரசை விமர்சிப்போருக்கு பதவிகள் நாட்டுக்கு நன்மை கிடையாது

## ஐக்கிய மக்கள் சக்தி காட்டம்

கொழும்பு, நவ. 4

இந்த அரசை கடுமையாக விமர்சிக்கும் தேரர்களுக்கு தற்போது பதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இவ்வாறான அரசியல் நியமனங்க ளால் நாட்டுக்கு நன்மை பயக்கப்போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோர் மட்டுமே உரையாற்றினர். இதன்மூலம் தமது மொட்டுக் கட்சி என்பது குடும்பக் கட்சி என்ற தகவலை வெளிப்படுத்தியுள்ளனர்.

மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சில போலியான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். கடந்த ஆட்சியில்தான் பொருள்களின் விலைகள் இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டன என்று ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். அப்படியானால் தற்போது என்ன நடக்கின்றது?

தேசிய வளங்கள் விற்கப்படமாட்டாது என பிரதமர் அறிவிப்பு விடுக்கின்றார். பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் மாநாட்டில் அமர்ந்துள்ளனர். அந்தப் பங்காளிகள் தேசிய வளங்களைக் காக்கவே தற்போது போராடுகின்றனர் என்பது பிரதமருக்குத் தெரியதா?

இந்த அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கிய தேரர்கள், அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான செயலணிக்கு ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளார். முருத்தெட்டுவே ஆனந்த தேருக்கு உபவேந்தர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான அரசியல் நியமனங்களால் என்ன பயன்?- என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ஒ-44)

நவம்பர் 2021

**வடமாகாண மரநடுகை மாதம்**




"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்கார முடியாது என்று தெரிந்தும் மரங்களை நடும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பெரியளவில் வளர்ச்சியடையும்"

– கிரேக்கப் பழமொழி

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 15.11.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
**சிவசம்பு மகேந்திரன்**
**[அசோகன்]**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு இன்று (04.11.2021) வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
காளி கோவிலடி, கோப்பாய்.

(CS 17928) 1-6

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (05.10.2021) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளி விளக்கு

**அமரர் சின்னத்தம்பி**
**யோகேந்திரம் (யோகராசா)**

(பரந்தன் – இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.11.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறுவதனால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**161 ஆம் கட்டை, உமையாள்புரம்,**
**பரந்தன்.**

(CS 1102)(3.6)

குடும்பத்தினர்

# கழுதையால் மாட்டியது கஞ்சா

## சோதனைக்கெடுபிடியால் மக்கள் அவஸ்தை

தலைமன்னார், நவ. 4

மோட்டார் சைக்கிளில், கேரளக் கஞ்சாவை மறைத்துக் கொண்டு சென்றார் என்று குற்றஞ்சாட்டப்படும் ஒருவர் கழுதையுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானநிலையில், கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பேசாலை பகுதியிலிருந்து புத்தளத்துக்கு கேரளக் கஞ்சாவை கடத்திச் சென்றபோது, தள்ளாடி முகாமுக்கு அருகாமையில் கழுதை ஒன்றுடன் மோதி அவர் விபத்துக்குள்ளானார். அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, கஞ்சா வைத்துள்ளரர் என்பது தெரியவந்தது. அந்தத் தகவல் பொலிஸாருக்கு பறந்தது.

அதனையடுத்து மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் அவரைக் கைதுசெய்தனர்.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

அவரிடமிருந்து ஒரு கிலோ 665 கிராம் கேரளக்கஞ்சா மீட்கப்பட்டது. அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இதேவேளை, கஞ்சா மீட்கப்பட்டதையடுத்து, மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடியில், சோதனை நடவடிக்கைகள் மேலும் தீவிரமாகியுள்ளன.

முன்பிருந்தே கடுமையான சோதனைக் கெடுபிடிகள் இருந்துவருகின்றன. அதனால், தாம் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றோம். சோதனை என்ற பெயரில் இராணுவத்தினர் தங்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வருகின்றனர் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னாரிலிருந்து போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் நோக்குடன் குறித்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இராணுவத்தினர் கூறுகின்றனர்.

எனினும், மன்னாரிலிருந்து வெளி இடங்களுக்கு செல்பவர்களும், வெளி இடங்களிலிருந்து மன்னாருக்கு வருகின்றவர்களும் குறித்த சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் பலத்த சோதனைகளை, கெடுபிடிகளை எதிர்கொள்கின்றோம் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். சிறு வியாபார நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், குறித்த சோதனை நடவடிக்கை காரணமாக பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கின்றனர். இதற்கு மாற்றுத்தீர்வு அவசியம் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-56)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 15 . 10 . 1926 — மறைவு 05 . 10 . 2021

அமரர் திருமதி
**தங்கக்குட்டி முத்தையா**

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி எம்மைவிட்டு
சென்றதேனோ?
கருணை நிறைந்த உங்கள் முகம் காண
கவலையுடன் தேடுகின்றோம்.
நாட்கள் முப்பத்தொன்று ஆனதம்மா - உங்கள்
அரவணைப்பை நாங்கள் இழந்து
அம்மா உங்கள் நீங்காத நினைவலைகளுடன்
இறைவனைக் கேட்கிறோம்
கருணை நிறைந்த கடவுளே மீண்டும் ஒரு கருவறை
தந்தால் எம் அன்னையின் வயிற்றில்
உதிக்கும் வரத்தை தந்திடுவாய்

## 108ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 . 05 . 1945 — மறைவு 20 . 07 . 2021

அமரர் திருமதி
**முத்துலிங்கம் சௌபாக்கியவதி**

குடும்பத்தின் ஜீவனாகி குளவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மைச் சென்றதுவோ
நூற்றிஎட்டு நாள் போனாலும்
ஆறாது உம் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு
மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து கரைகின்றோம்
எம் வாழ்வை
மண்மீது உமை எண்ணும்
மனதோடு வாழ்கின்றோம்.

**224, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.**

(CR 5834) 1-6

**குடும்பத்தினர்.**




அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

Fitch Rating AA- (lka) | +94 112 353 353 | www.combank.lk

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்


# விவசாயிகளின் போராட்டத்தில் அரிசி ஆலை உரிமையாளர்கள்

## குற்றஞ்சாட்டுகின்றது அரசு



**கொழும்பு, நவ.4**

**இரசாயன உரம் வழங்கக் கோரி பொலநறுவையில் மேற்கொள்ளப்படும் போராட்டத்தின் பின்னணியில் அரிசி ஆலை உரிமையாளர்கள் உள்ளனர் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

'சௌபாக்யா' வீட்டுத் தோட்டத் திட்டத்தின்கீழ் குடும்பங்களுக்கு விதைகள் மற்றும் விவசாயக் கருவிகள் வழங்கும் நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பல மாவட்டங்களில் நெற் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பொலநறுவை மாவட்ட விவசாயிகள் ஒழுங்கமைக்கப்பட்ட தொடர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். பொலநறுவையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் நிதியளிக்கின்றனர்.

பொலனறுவையில் உணவு தவிர்ப்பில் இருக்கும் விவசாயிகளில் உண்மையான விவசாயிகள் எத்தனைபேர் என்பது கண்டறியப்படவேண்டும். நானோ நைட்ரஜன் திரவ தேவையை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு இந்திய விமானப்படை ஒப்புக்கொண்டுள்ளது. ஏனெனில் அவற்றை கப்பல் மூலம் கொண்டு வரக் காலம் எடுக்கும். நோய்த் தொற்றால் அறுவடைக்கு ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பதற்காக ஒரு தொகை பூச்சிக் கொல்லி மருந்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்த மாத இறுதிக்குள் 8 இலட்சம் ஏக்கருக்கு மேல் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படும்.

2 இலட்சத்து 44 ஆயிரம் ஹெக்ரேயர் பரப்பளவில் கரிம உரங்களைப் பயன்படுத்தி நெல் பயிரிடப்பட்டுள்ளது. 5 இலட்சம் ஹெக்ரேயர் நிலத்தில் விரைவில் கரிம உரங்களைப் பயன் படுத்தி நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளது - என்றார். (எ-இ)

# விதைப் பொதிகள் வழங்கிவைப்பு!



முல்லைத்தீவு, நவ.4

சௌபாக்கிய திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் வீட்டுத் தோட்டப் பயனாளிகளை ஊக்குவிக்கும் நோக்கில் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தில் இலவசமாக வீட்டுத்தோட்ட விதைகள் அடங்கிய பொதிகள் மாவட்ட உதவி ஆணையாளர் தலைமையில் மக்களுக்கு கடந்த திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ய-19)

# வீடுகளில் பணியாற்றும் நடைமுறையைத் தொடர்க

## வலியுறுத்துகின்றது சுகாதாரத் தரப்பு



கொழும்பு, நவ.4

பணியாளர்களை வீடுகளில் இருந்து பணி செய்வதற்குத் தொடர்ந்து அனுமதிக்க வேண்டும். நாட்டில் கொரோனாத் தொற்று இல்லை என எந்த வகையிலும் கூறமுடியாது. இவ்வாறு இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் வீடுகளிலிருந்து பணியாற்றும் நடைமுறையைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

இந்த வாரத்தில் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கையிலும், கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் எண்ணிக்கையிலும் சற்று அதிகரிப்பு காணப்படுகின்றது.

தற்போதுள்ள சூழ்நிலையில் நாட்டை மீண்டும் முடக்குவதை எதிர்பார்க்கமுடியாது. அனைவரும் ஒன்றிணைந்து தங்களின் நடத்தையால் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-இ)

## சகல துன்பங்களும் நீங்கி சௌபாக்கியம் கிட்டட்டும்



உலகளாவிய இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் மிகவும் சிறப்புமிக்கதொன்றாக தீபாவளித் திருநாள் கருதப்படுகின்றது. இந்துக்களின் ஆன்மீக வழிபாடாகவும், பாரம்பரிய கலாசாரப் பெருவிழாவாகவும் காணப்படும் தீபாவளித் திருநாள் மூலம், வாழ்வின் துன்பங்கள் நீங்கி இன்பங்களை அடைந்து கொள்வதே நோக்கமாகும்.
இந்தத் தீபத்திருநாள் அறத்தின் ஆட்சியையும், ஆணவத்தின் வீழ்ச்சியையும் குறிக்கின்ற நாளாகும். தாமதித்தாலும் வாய்மையே இறுதியில் வெல்லும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.
சுற்றாடலுடன் ஒன்றுபட்டுள்ள பருவ மாற்றங்களோடு, பண்டைய காலந்தொட்டு மானிடர்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஆன்மீகப் பரிமாறல்ளை மிகவும் உற்சாகமாகவும், பக்தியுடனும் கொண்டாடுகின்ற தீபாவளி நன்னாள், சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் மகிழ்ச்சியையும், உத்வேகத்தையும் ஏற்படுத்துகின்றது.
தீபாவளித் திருநாளில் பிரபஞ்சத்துக்குப் பிரவேச மாகும் சுப சக்தியால் உலக மக்கள் யாவருக்கும் மகிழ்ச்சி, சௌபாக்கியம், செல்வம் மற்றும் தெய்வ அருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**கோத்தாபய ராஜபக்ச**
**ஜனாதிபதி**

## வேறுபாடுகளைக் களைந்து ஒளிமயமான வாழ்வு பெறுக



'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத் தின் நோக்கு' எனும் அரசின் தேசிய கொள்கைக்கு அமைவாக, ஒளி நிறைந்த வளர்ச்சிப் பாதையை நோக்கி, பல தடைகளைத் தாண்டி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.
கொரோனாத் தொற்றிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாக்கும் பணியோடு, பல முன்னேற்றகரமானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.
தேசிய ஒற்றுமையைப்போற்ற இது ஒரு சிறந்த நாளாகும். சகல மதங்களிலும் விளக்கு ஏற்றி வழிபாடு செய்யப்படுவதென்பது எம்முள் இருக்கும் அறியாமை என்னும் இருள் அகன்று அகவொளி பிரகாசிக்க வேண்டும் என்பதற்கான குறியீடாகும்.
மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்து வைத்திருந்த அனைத்து வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம்.
இந்த ஒளியை நாம் அணையவிடாமல் பாதுகாத்து மறுபடியும் இருளுக்குள் மூழ்காமல் எம்மைப் பாதுகாத்துக்கொள்ள் வேண்டும்.

**மஹிந்த ராஜபக்ச,**
**பிரதமர்**



## மகிழ்ச்சியான வாழ்வு கிட்டட்டும்

குடும்ப உறவுகள் மற்றும் நட்பு வட்டங்களில் கொண்டாடப்படும் விழாக்கள் எப்போதும் மகிழ்வானவை. அன்பையும், உறவையும் வளர்ப்பவை. அந்த வகையில் 2021ஆம் ஆண்டுக்குரிய தீபாவளிப் பெருவிழா உங்கள் குடும்ப மற்றும் நட்பு உறவுகளைப் புனிதப்படுத்தி, புதியதாக்கி அன்பையும், புரிந்துணர்வையும் எதிர்கால நம்பிக்கையையும் வளர்த்து ஒளியைத் தரும் ஒரு விழாவாக அமைய வாழ்த்துகிறோம்.
இருளைப் பழிப்பதைவிட ஒளியைப் ஏற்றுவதே சிறந்தது.
இருளுக்கும் ஒளிக்குமான போராட்டத்தில் ஒளியே வெல்ல வேண்டும். நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில் நன்மையே வெல்ல வேண்டும். இருள் நிறைந்த துன்பமான வேதனை மிக்க வாழ்வை விடுத்து, ஒளிமிகுந்த மகிழ்ச்சியான வாழ்வையே எல்லோருக்கும் நாம் ஆசிக்க வேண்டும்.

**மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை,**
**யாழ்.ஆயர்**

## அரச அடக்குமுறையிலிருந்து மக்களுக்கு விடிவு கிட்டட்டும்



பல தசாப்தங்களாக அடக்கு முறைகளுக்கும், அராஜகங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து வரும் எமது மக்களுக்கு இனியாவது சுபீட்சமான, சுதந்திரமான வாழ்வு மலர வேண்டும் என்று இன்றைய நாளில் பிரார்த்திப்போம்.
போர் ஓய்ந்துவிட்டது. ஆனால் நாட்டில் அமைதி இல்லை. சுபீட்சத்துடன் நாடு செயற்படுகின்றது என்று அரச தரப்பு தெரிவித்தாலும், மக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்துள்ளனர்.
போர்ச்சூழலில் இருந்ததை விட தற்போதுதான் சிறுபான்மையினர் அடக்கி ஆளப்படுகின்றனர். மக்களை பல்வேறு வழிகளில் மோசமாக வதைத்து வருகின்றது ராஜபக்ச அரசு.
நீண்ட காலம் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடிவில்லை. அப்பாவி இளைஞர்கள் பலர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.
தமிழரின் தாயகம் பறிபோகின்றது. இவ்வாறான நிலையில், எமது மக்களுக்கு விடிவு மற்றும் சுதந்திரம் வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போம்.

**ஈ.சரவணபவன்**
**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்**

## எந்தவொரு துயரங்களும் எதிர்காலத்தில் வேண்டாம்



தீபாவளியைக் கொண்டாடும் அனைத்து இந்துப் பெருமக்களுக்கும் வாழ்த்துக்கள். இன்றைய நாள் கடந்த காலங்களில் அனுபவித்த குறிப்பாக கொரோனாத் தொற்றால் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள் நீங்கி, இயல்புநிலைக்குத் திரும்பவேண்டும். கொடிய துயரங்கள் அனைத்தும் நீங்கி, நல்லதொரு சுபீட்சமும், சௌபாக்கியமும் அனைவர் வாழ்விலும் அமைய வேண்டும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இன்றைய தினத்தை அனுஷ்டிப்போம்.

**க.மகேசன்**
**யாழ்.மாவட்டச் செயலர்**



## கருத்தொருமித்து ஆனந்தமாக வாழ்க

தீபத்திருநாளில் அனைவரும் கருத்தொருமித்து ஆனந்தமயமான வாழ்வை வாழ வாழ்த்துகின்றேன். பிறக்கின்ற தீபத்திருநாளில் அனைவருக்கும் சங்கடங்கள் நீங்கி, மகிழ்வாக வாழ்வதற்கான ஆத்ம பலத்தை இறைவன் அருள வேண்டும். வாழும் காலத்தில் அனைவருக்கும் உறுதுணையாக அன்பு பரிமாறும் நல் உள்ளத்தவர்களாக, இயலாதவர்களை எம்மோடு இணைத்து அவர்களையும் உயர்த்தி நாமும் உயர்வாக வாழ சிந்தை செய்து கொள்வோம்.
பழையன கழிந்து புதியன கொண்டு, நல்லெண்ண வெளிப்பாடுகளோடு இந்தப் பூமிப்பந்தில் வாழும் காலம் வரை உணர்வுள்ள மனிதர்களாக வாழ வேண்டும். எண்ணமும், சிந்தனையும் உயர்ந்ததாகக் கொள்வோம்.

**மயூரக்குருக்கள்**
**கோவில்குளம்**
**நாராயணர் ஆலய பிரதமகுரு**

## வறுமைகள் நீங்கி செல்வத்துடன் வாழ்க

எமது சமயம் தன் பண்பாட்டை ஒழுங்கு படுத்த பல்வேறு முறையியல் தன்மைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் பண்டிகைகள் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்தவகையில் தீபாவளி பண்டிகையும் சிறப்புப் பெறுகின்றது.
தீபம் வெறும் விளக்கு அல்ல வாழ்வின் கலங்கரை விளக்கு. தீங்கு அகற்றி சுடரச் செய்யும் பேரொளியால் கலக்கம் அகற்றும் தன்மை கொண்டது.
தீபம் என்றால் "விளக்கு "ஆவளி என்றால் "வரிசை" அதாவது தீபங்களை வரிசையாக ஏற்றி ஒளிமயமான இறைவனை வழிபடும் புண்ணிய தினமே தீபாவளி என்று கூறும் மரபும் உண்டு. தீபாவளியன்று நீராடுவதை புனித நீராடல் சான்று சொல்லப்படுகின்றது. அன்றைய தினம் அதிகாலையில் எல்லோரும் நீராடுவர். தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமியும், அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில் பூமாதேவியும், புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் பேசிப்பதாக முதுநூல்கள் கூறுகின்றன.
அந்த வகையில் இது வெறும் பண்டிகையாக மட்டுமல்லாது வாழ்வைச் செம்மைப்படுத்தும் ஒரு நிகழ்வாகவும் அமைகின்றது.
உலக மக்கள் வாழ்வு ஏற்றமிகு வாழ்வாக அமையப்பெற்று அனைவரின் வாழ்வில், அனைத்து வறுமைகளும் நீங்கி நிறைவான செல்வத்துடன் நோய் நொடி இல்லாமல் நலமுடன் வாழ தீபத் திருநாளில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**க.வைத்தீஸ்வரக்குருக்கள்**
**இந்து குருமார் அமைப்பு**


Maliban
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
உங்கள் வாழ்க்கையில் துன்பங்கள் கரைந்துபோக ஒளிமயமான எதிர்காலம் பிறக்க The House of Maliban இன் நல்வாழ்த்துக்கள்.

# போலி வெளிநாட்டு முகவர்கள்: தென்மராட்சியில் விழிப்புணர்வு



கொடிகாமம்,செப்.4
போலி வெளிநாட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டவர்களை, மீண்டும் இலங்கைக்கு அழைப்பது தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கை தென்மராட்சியில் முன்னெடுக்கப்பட்டது.

முகவர்கள் ஊடாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக்கூறி ஏமாற்றப்பட்டு, நிர்க்கதியாக இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருப்போரை இலங்கைக்குப் பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளையும், உதவிகளையும் மேற்கொள்வதற்கான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் துரித தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதற்கான விழிப்புணர்வு பதாகைகள் கொடிகாமம் நகர்ப்பகுதி, சாவகச்சேரி நகரப்பகுதி மற்றும் பிரதேச செயலகம் முன்பாக காட்சிப்படுத்தப்பட்டன.

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ச.சுகிர்தன் மற்றும் சாவகச்சேரி பிரதேசசபையின் உபதவிசாளர் செ.மயூரன் ஆகியோர் விழிப்புணர்வுப் பதாகைகளைக் காட்சிப்படுத்தினர்.

வெளிநாடுகளுக்குச் சென்று, கைவிடப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வசிப்பவர்களின் உறவினர்கள் 077441 0086 என்ற நிறுவனத்தின் துரித தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தொடர்ச்சியாக ஏனைய பிரதேச செயலகங்களிலும் விழிப்புணர்வுக் காட்சிப்படுத்தல் இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளார். (ஒ-4-159)



## ஒக்ரோபரில் மாத்திரம் 22,771 சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, நவ. 4
ஸ்ரீலங்காவுக்கு கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மட்டும் 22 ஆயிரத்து 771 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதத்தைக் காட்டிலும் ஒக்ரோபர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 68 சதவீதம் அதிகரித்துள்ளதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கடந்த 10 மாதக் காலப் பகுதியில் நாட்டுக்குள் வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 60 ஆயிரத்தைக் கடந்துள்ளதுடன் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்தே வந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (ம)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
01.07.1934

மறைவு
05.10.2021

### அமரர் திரு. இளையதம்பி இராசநாயகம்

உரிமையாளர் – துர்க்கா மரத்தொழிற்சாலை சண்டிலிப்பாய், அல்லையம்பதி
ஓய்வு பெற்ற லிகிதர், தலைவர், கட்டுவன் மேற்கு சோழங்கராயன் தோட்டம்
அருள்மிகு விக்னவிநாயகர் ஆலயம்.

கடந்த (05.10.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று முன்தினம் (02.11.2021) செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனிதத்தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (04.11.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துக்கத்தில் பங்கெடுத்து தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் துயர் பகிர்ந்தும் பதாகைகள், பிரசுரங்கள் மூலமும் இறுதி அக்கினி சங்கம நிகழ்வில் நேரில் பங்கெடுத்தும் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தோரிற்கும் அப்பா நோயுற்ற இறுதி நேரத்தில் உதவிய வைத்தியர்கள், உத்தியோகத்தர்களிற்கும் அன்றிலிருந்து இன்று வரை பல வழிகளிலும் பேருதவிகள் புரிந்த நண்பர்கள் அனைவரிற்கும் சிரந் தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மில் ஒழுங்கை,
சண்டிலிப்பாய்.

(CR 5823) (3.6)

குடும்பத்தினர்
077 711 4852


# விழிப்புணர்வு செயற்றிட்டம்



யாழ்ப்பாணம், நவ.34
காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீரிமலைப் பகுதியில் விசேட வீதிப் போக்குவரத்து மற்றும் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்ட நிகழ்வு பொதுமக்கள், 788 வழித்தட சாரதிகள், நடத்துநர்கள், மோட்டார் வாகன ஓட்டுநர்கள் என்போருக்கு காங்கேசன்துறை பொலிஸாரால் கீரிமலை நகுலேஸ்வர ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் மு.ப. 10 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கொரோனாச் சூழலில் பாதுகாப்பாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் வீதி விபத்துக்கள் அதிகரித்து வரும் நிலையில் அவற்றைத் தடுப்ப தற்கான முறைகளையும் இதன்போது பொலிஸார் தெளிவுபடுத்தினார். (ய-125)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** அன்புக்குரியவர்களால் சமீபத்தில் தோன்றிய ஏமாற்றம் மறையும். பணிச்சுமை இருக்கும். மனதில் உற்சாகம், தன்னம்பிக்கை கூடும். யோகம் உண்டாகும் நாள்.

**இடபம்:** புதிய முயற்சிகள் தொடங்க இன்று பொருத்தமான நாளாகும். தொழில், பணியில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் இருந்த சிரமங்கள் குறையும்.

**மிதுனம்:** கடந்த நாட்களில் இருந்த பதற்றம் முடிவுக்கு வரும். விமர்சனங்களால் மனதில் கசப்பு ஏற்பட அனுமதிக்க வேண்டாம். மனம் மகிழும் நாள். கடன் ஓரளவு குறையும்.

**கடகம்:** பொறுப்புடன் செயற்படுவதன் மூலம் நிம்மதி அடைவீர்கள். கலை ஒன்றைக் கற்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தினர் ஆதரவு உண்டு. குழப்பம் தீர்ந்து நிம்மதி வரும்.

**சிம்மம்:** கலகலப்பான நாள். பலரது வேலைகளை கவனிக்க வேண்டி வரும். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்லும் வார்த்தையை பிறர் தவறாக எடுக்க வாய்ப்புள்ளது. பணிச்சுமை காரணமாக மனதில் மிகுந்த பரபரப்பு இருக்கும்.

**கன்னி:** குதூகலமான நாள். எதிர்பார்த்த நன்மைகள் தக்க சமயத்தில் வரும். எதிர்பாராத நல்ல செய்தி வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**துலாம்:** நீங்கள் நினைத்ததைவிட திட்டம் ஒன்று வெற்றிகரமாக முடியும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். முக்கியமான விஷயத்தில் இருந்த தாமதம் நீங்கும். மகிழ்ச்சியான நிகழ்ச்சி ஒன்று நடைபெறும்.

**விருச்சிகம்:** நண்பர் ஒருவர் நல்ல செய்தியை தருவார். மகிழ்ச்சி கூடும். பூமி சம்பந்தமான விஷயங்களில் சாதகமான நிலைவரும். தாமதப்படுத்தப்பட்டு வந்த விஷயம் ஒன்றை முடிப்பீர்கள்.


**தனுசு:** பல நாட்களாகக் குறைந்திருந்த மன அமைதி மீளும். பல நாள் செய்த முயற்சி ஒன்றில் இருந்து வெற்றி கிடைக்கும். பணியாளர்கள் வேலையில் முனைப்பாக இருப்பீர்கள்.

**மகரம்:** கவலை தரும்படியான விஷயம் இன்று நடக்கலாம். செலவுக்கேற்ப வரவு வரும். கற்பனைகளால் பயம் ஏற்படும். தள்ளிப்போன விஷயம் ஒன்று இன்று தடையின்றி நடைபெறும்.

**கும்பம்:** காலையில் கலகலப்பான சூழல் நிலவும். மன நிறைவு உண்டு. எடுத்த பணியை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குதூகலம்கூடும். உடன் பணியாற்றும் ஒருவர் உங்களுக்கு பக்கபலமாக உதவி செய்வார்.

**மீனம்:** சகோதரர்களுடன் ஒத்துப் போங்கள். பொறாமைக்காரர் விலகுவார். உங்கள் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர், நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
1941 . 12 . 19

ஆண்டவன் அடியில்
2021 . 10 . 05

## அமரர் ஆறுமுகம் தெட்சணாமூர்த்தி அவர்கள்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துனர்)

கடந்த 2021.10.05. ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புரட்டாதி மஹாளய அமாவாசைத்திதியில் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவர் அவர்களுக்கு 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்த நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

இன்று 2021.11.04 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் 31 ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகள் நடைபெற்று. அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பண்ணாகம்
சுழிபுரம்.

(cs 40903) (2.6)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# வான் கதவுகள் திறப்பு

கொழும்பு, நவ. 4

மலைநாட்டில் பிற்பகல் வேளையில் பெய்துவரும் அடைமழையால், மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்து ரம்மியமாகக் காட்சியளிக்கின்றது. (ஒ-ரி1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 10 . 1975



மறைவு
02 . 11 . 2021

## சோமசுந்தரம் பரமசிவம்

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பரமசிவம் அவர்கள் நேற்று முன்தினம் (02.11.2021) செவ்வாய்க் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் சோமசுந்தரம் மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், கோகுலராஜா உமாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், அனுஷாவின் அன்புக் கணவரும், கோகுலன், வைஸ்ணவி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரசிவம், திருநீலகண்ட சிவம், நித்தியானந்தசிவம், சத்தியசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரதீப், பிரகாஸ், சிவரஞ்சினி, சசிகலா, வையந்திமாலா, காந்திலதா, தனுசியா, சாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சிகா, ரஜீவன், சிவகாந்தன், மயூரன், சிவசுதன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், சுஜீவனின் அன்புச் சித்தப்பாவும், பரவின், பிரயுன் பிரணவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு : சோமசுந்தரம் (அப்பா) - 077 316 4305
அனுஷா (மனைவி) - 164 729 651 33
கோகுலராஜா (மாமா) - 14167997711
பிரதீப் (மச்சான்) - 14163717716

தகவல்:
குடும்பத்தினர்

(CS 17922) (3.6)

# நினைவு அஞ்சலி

